பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 09 2024 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வன்முறையை கைவிட்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளர்களின் பிரச்சினைக்கு மத்திய அரசு உரிய தீர்வு அளிக்கும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரெளபதி முர்மு கூறியுள்ளார்.

2. அமெரிக்காவில் மூன்று நாள் அரசுமுறைப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி சற்றுமுன் அந்நாட்டின் **Philadelphia** விமான நிலையம் சென்றடைந்தார்.

3. தில்லி முதலமைச்சராக ஆம் ஆத்மி கட்சியின் திருமதி **Atishi** இன்று பதவியேற்றார்.

4. தமிழகத்தை சேர்ந்த 37 மீனவர்களை கைது செய்து, அவர்களின் மூன்று மீன்பிடி படகுகளையும் இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

5. இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று ஆட்டநேர இறுதியில், பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட் இழப்பிற்கு 158 ரன் எடுத்துள்ளது.

*<u>-- இனி விரிவான செய்திகள் ----</u>*

<<<<<<>>>>>>

வன்முறை எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வாகாது என்றும், அதனை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது எனவும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தாரில் மாவோயிஸ்ட் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களை இன்று தமது இல்லத்தில் சந்தித்து பேசிய குடியரசுத் தலைவர், வன்முறை மக்களுக்கு எந்தவிதத்திலும் நன்மை பயக்காது என்று கூறினார்.

வன்முறையை கைவிட்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளவர்களின் பிரச்சினைகளுக்கு மத்திய அரசு உரிய தீர்வை அளிக்கும் என்றும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

அமெரிக்காவில் மூன்று நாள் அரசுமுறைப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி சற்றுமுன் அந்நாட்டின் **Philadelphia** விமான நிலையம் சென்றடைந்தார்.

அவர் இன்றிரவு **Wilmington**-ல் அதிபர் திரு ஜோ பைடனை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

**Quad** தலைவர்கள் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்றிரவு கலந்துகொள்கிறார்.

இந்திய நேரடிப்படி இன்று நள்ளிரவுக்குப்பின் தொடங்கும் இந்த உச்சிமாநாட்டில் கலந்துகொள்ளும் நான்கு நாடுகளின் தலைவர்கள் பருவநிலை மாறுபாடு, வளர்ந்துவரும் தொழில்நுட்பம், பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

ஆஸ்திரேலிய பிரதமர் திரு **Anthony Albanese**, ஜப்பான் பிரதமர் திரு **Fumio Kishida** ஆகியோரையும் சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்த திரு நரேந்திர மோடி திட்டமிட்டுள்ளார்.

**<<<<<<>>>>>>**

ஜம்மு எல்லைப்பகுதியில் ஊடுருவல் மற்றும் தாக்குதல்கள் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா கூறியுள்ளார்.

ஜம்மு-வில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், நீண்டகாலமாக ஜம்மு எல்லைப்பகுதியில் துப்பாக்கிச்சூடு சம்பவங்களோ, சண்டையோ ஏற்படாததால், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மீது பாகிஸ்தான் அச்சம் கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

எல்லைப்பகுதியில் உள்ள மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் அன்றாடம் சந்திக்கும் தாக்குதல்களுக்கு முடிவுகாணப்பட்டு, அமைதியுடன் வாழ்ந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

ஜம்மு-வில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக மாவட்ட, வட்டார மற்றும் பஞ்சாயத்து அளவில் ஜனநாயகத்தின் பயன்களை மக்கள் அனுபவித்து வருவதாக திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்திக்கு எதிராக அவதூறாக பேசுபவர்கள் மீது பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜம்மு-வில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட திரு கார்கே, முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி குறித்தும் தவறான தகவல்களை ஆளுங்கட்சியை சேர்ந்த தலைவர்கள் பேசி வருவதாக குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>

தில்லி முதலமைச்சராக ஆம் ஆத்மி கட்சியின் திருமதி **Atishi** இன்று பதவியேற்றார்.

அவருக்கு துணை நிலை ஆளுநர் திரு வி கே சக்சேனா பதவி பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்துவைத்தார்.

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திரு கோபால் ராய், திரு கைலாஷ் கெலாட், திரு சௌரவ் பரத்வாஜ், திரு இம்ரான் உசைன், திரு முகேஷ் ஆகியோரும் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

முதலமைச்சராக பதவியில் இருந்த திரு அரவிந்த் கெஜ்ரிவால், ராஜினாமா செய்ததையடுத்து, திரு **Atishi** தில்லி முதலமைச்சராக இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மூன்றாவது முறையாக பதவியேற்ற முதல் 100 நாட்களில் வன உயிரின வாழ்விடங்கள்

மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வன உயிரின வாழ்விடங்களை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை இரண்டாயிரத்து 600 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

புலிகள், யானைகள் ஆகிய உயிரினங்களை பாதுகாப்பதற்கு தனித்தனியாக திட்டங்கள், ஒட்டுமொத்த வன உயிரின வாழ்விட மேம்பாட்டுக்கான திட்டம் ஆகியவற்றுக்கு இந்த தொகை செலவிடப்படும்.

இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் 50 லட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மொத்தம் 55 புலிகளுக்கான புகலிடங்களும், 33 யானை சரணாயலங்களும் உள்ளதாகவும், மொத்தம் 718 இடங்கள் வன உயிரின பாதுகாப்பு இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றுச்சூழல் அமைச்சகம் கூறியுள்ளது.

ஒருங்கிணைந்த வன உயிரின வாழ்விட மேம்பாட்டுத்திட்டத்தை, மத்திய அரசு தொடர்ந்து செயல்படுத்தும் என்றும், அமைச்சகம் தெரிவத்துள்ளது.

<<<<<<>>>>>>

நாகை மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களை சேர்ந்த 37 மீனவர்களை, இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களின் மூன்று மீன்பிடி படகுகளையும் அவர்கள் பறிமுதல் செய்துள்ளனர்.

நெடுந்தீவு அருகே இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினர் இவர்களை கைது செய்து காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

நாளை காலை அவர்கள் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் இளம் மருத்துவர்கள் தங்களது போராட்டத்தை விலக்கிக் கொண்டதையடுத்து இன்று அங்குள்ள

மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில், மருத்துவ அவசரப்பணிகளில் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

42 நாட்களாக நடைபெற்றுவந்த வேலைநிறுத்தப்போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டதையடுத்து, அவர்கள் மீண்டும் பணிக்கு திரும்பியுள்ளனர்.

மருத்துவக்கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளில் பணியாற்றுபவர்களின் பாதுகாப்புக்காக மாநில அரசு வெளியிட்ட பத்து உத்தரவுகள் மாணவர்களிடையே அறிவிக்கப்பட்டதையடுத்து, அதனை ஏற்றுக்கொண்டு அவர்கள் மீண்டும் பணியில் சேர்ந்துள்ளனர்.

<<<<<<>>>>>>

தாய்லாந்திலிருந்து தூதரக நடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட தூத்துக்குடியை சேர்ந்த முத்துக்குமார், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் ஸ்ரீவைகுண்டம் வந்தபோது அவரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, தாய்லாந்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தம்மை மீட்டு, இந்தியாவிற்கு அனுப்பி வைத்ததாக எமது செய்தியாளரிடம், முத்துக்குமார் கூறினார்.

*(சவுண்ட் பைட் - முத்துக்குமார் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று ஆட்டநேர இறுதியில், பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட் இழப்பிற்கு 158 ரன் எடுத்துள்ளது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 287 ரன் எடுத்திருந்த நிலையில் டிக்ளர் செய்தது.

சுப்மன் கில் அபாரமாக ஆடி ஆட்டமிழக்காமல் 119 ரன் எடுத்தார்.
ரிஷப் பந்த் 109 ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.
இந்தியா முதல் இன்னிங்சில் 376 ரன் எடுத்தது.

பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 149 ரன்

----------

19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

---------

சீனாவின் **Chengdu**-வில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் புகி பாம்ரி – பிரான்சின் அல்பனோ ஒலிவேட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>>**